தமன பிரதேச சபை - 2022

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தமன பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தமன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா என்பதும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இரண்டு நிலையான வைப்பு கணக்குகள் தொடர்பாக, நிலையான வைப்பின் ரூபா 24,071 தொகை மற்றும் வட்டி வருமானத்தின் ரூபா 47,417 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இது 2023 ஆம் ஆண்டிலிருந்து தொடர்புடைய ஆண்டின் வருமானத்திற்கு செலவு வைக்கப்படும். | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்குரிய பெறவேண்டிய ரூபா 185,917 நீதிமன்ற தண்டப்பண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | பிராந்திய அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் PT 1 மற்றும் PT 1 2வது 50% இன் கீழ், ரூபா 6,000,000 பெறுமதியான உள்நாட்டு கோழிக் கூடு தயாரித்தல் மற்றும் குப்பை கொட்டும் கட்டம் - 01 மற்றும் கட்டம் 02 செயற்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்படவில்லை, ஆனால் அது தொழில்துறை கடன்பட்டோர் மற்றும் தொழில்துறை கடன்கொடுத்தோராக | அந்த தொகைகள் கணக்குகளில் இருந்து நீக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | தமன அலஹேன விளையாட்டரங்கம் நவீனமயமாக்கல் செயற்திட்டம் சபையின் மேற்பார்வையின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டதுடன் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் ஊடாக விலைப்பட்டியல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டது, ஆனால் உள்ளூராட்சி சபையானது இச்செயற்திட்டத்தின் பெறுமதியை ரூபா 4,645,470 தொழில்துறை கடன்பட்டோர் மற்றும் தொழில்துறை கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட ஹெலகம்புர உர முற்றத்தின் மின்சார வேலைகள் தொடர்பான செயற்திட்டத்தில் ரூபா 295,589 பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | இது 2023 யூன் 30 இல் மூலதனமாக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | பிராந்திய அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் (PT 1) கீழ் உபகரணங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட முறைமைகளுடன் முன் அலுவலகங்களில் குடிமக்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 930,826 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,859,183 தொகையான 09 கணக்கீட்டு விடயங்கள் தொடர்பாக பட்டியல்கள், நிலையான சொத்து ஏடுகள், மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் மதிப்பீட்டு வரி ஆவணங்கள் போன்ற எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டு முதல் மதிப்பீட்டுப் பதிவேடு கணனிமயமாக்கப்பட்டு பேணபடுகின்றதுடன், ஆண்டுக்கான பெறுவனவுகள் சமப்படுத்தப்படுகின்றன. 2010 அல்லது அதற்கு முந்தைய 08 மீதிகள் தொடர்பான தகவல்கள் எதுவும் காணப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற் கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 2,344,297 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 1,365,078 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சனவரி மாதத்திலிருந்து வங்கி பிழைகளாக உள்ளுராட்சி சபைக்கு சொந்தமான வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்ட ரூபா 150,000 தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வங்கியுடன் கலந்துரையாடப்பட்ட போதிலும் சீர்செய்யப்படாத நிலையில், உரிய ஆவணங்கள் உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் அங்கீகாரம் கிடைத்தவுடன் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்படும். | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமா்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப் பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப் பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 720,907 | 815,706 | 494,264 | 1,799,725 | 770,907 | 719,307 | 876,493 | 1,478,283 |
| (ii) | வாடகை | 3,585,000 | 1,914,501 | 854,593 | 1,876,723 | 4,099,000 | 3,152,914 | 3,056,516 | 816,814 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 1,020,000 | 446,850 | 446,850 | 83,750 | 1,693,000 | 1,282,450 | 1,282,450 | 83,750 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,970,400 | 2,544,562 | 2,544,562 | - | 5,165,500 | 3,993,117 | 3,329,337 | 663,780 |
| (v) | கூட்டுத் தொகை | **8,296,307** | **5,721,619** | **4,340,269** | **3,760,198** | **11,728,407** | **9,147,788** | **8,544,796** | **3,042,627** |

#### 2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) வீதவரிகளும் வரிகளும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள வீதவரி மீதி ரூபா 1,568,875 ஆகும். | 03 வருமான நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள் ஓராண்டுக்கும் மேலாக வெற்றிடமாக இருந்தது. எனவே, இது தொடர்பான செயற்பாடுகளை பட்டியலிட்ட திகதியில் மேற்கொள்ள முடியாத போதிலும், தற்போது தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள வருமான | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானம் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிர்வாக உத்தியோகத்தர்கள் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். | |

**(ஆ) வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள வாடகை மீதி ரூபா 1,701,919 ஆக இருந்ததுடன் நிலுவைகளை அறவிடுவதற்கு சபை எவ்வித சட்ட நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை. | வருமான நிர்வாக உத்தியோகத்தர்கள் இல்லாததால், வருமான அறவீடு மற்றும் சட்ட நடவடிக்கைகளில் சிக்கல்கள் காணப்படுகின்றதுடன். தற்போது தாற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள வருமான நிர்வாக உத்தியோகத்தர்கள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். | உடன்படிக்கைகளின் பிரகாரம் நிலுவை வருமானம் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி சபையின் முன்னாள் தலைவர் 2022 மே 09 ஆம் திகதி சபையின் கெப் வண்டியில் கூட்டமொன்றில் கலந்து கொண்டு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் ஏற்பட்ட தகராறில் கெப் தாக்கி தீவைக்கப்பட்டதுடன் கெப் முற்றாக சேதமடைந்ததுடன் நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப அறிக்கையின் பிரகாரம் வாகனத்திற்கு ரூபா 8,500,000 நட்டம் ஏற்பட்டது. ஆனால் காப்புறுதி இழப்பீடாக பெறப்பட்ட தொகை ரூபா 5,000,000 ஆக இருந்ததுடன் உள்ளூராட்சி சபைக்கு ரூபா 3,500,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. கெப் வண்டி கடைசியாக 2017 ஆம் ஆண்டில் பெறுமதியிடப்பட்டதால் அந்த பெறுமதியின் பிரகாரம் காப்புறுதி சான்றிதழ் பெறப்பட்டது. | விசாரணையொன்று நடாத்தப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி பலப்படுத்துதல் தொடர் நிகழ்ச்சித்திட்டம் – 2021 இன் கீழ் உள்ளூராட்சி சபைக்கு கொள்வனவு செய்யப்பட்ட வீதி விளக்கு உபகரணங்களில் களஞ்சியத்திற்கு பெறப்பட்டிருக்காத ரூபா 48,400 பெறுமதியான 7/0.53 வயரின் 05 றோல்களுக்காக பொருளிருப்புப் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக உள்ளூராட்சி சபைக்கு ரூபா 48,400 நட்டம் ஏற்பட்டிருந்தது. | தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நட்டத்தை அறவிடுவதற்கும் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிராந்திய அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் PT 1 மற்றும் PT 1 2வது 50 இன் கீழ் உள்ளூராட்சி சபை மற்றும் ஹிகுரான சந்தையில் 02 நிலையான எரிசக்தி முறைமைகளை நிறுவுவதற்கான 02 செயற்திட்டங்களுக்கு ரூபா 6,000,000 நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய இச் செயற்திட்டங்கள் நடைமுறைச் சிக்கல்கள் தோன்றியதால் நிறுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக, 2022 நவம்பரில் இருந்து உள்நாட்டுக் கோழி கூண்டு தயாரித்தல் மற்றும் கோழிக்குஞ்சுகள் வழங்கும் 02 செயற்திட்டங்களுக்கு அங்கீகாரம் கோரப்பட்டது, ஆனால் கணக்காய்வு திகதியான 2023 யூன் 08 வரையிலும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இதனால், உள்ளூராட்சி சபை மட்டத்தில் அமுல்ப்படுத்தப்படக்கூடிய செயற்திட்ட முன்மொழிவுகளை தயாரித்து சமர்ப்பிக்காததன் காரணமாக உள்ளூராட்சி சபைக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 6,000,000 ஒதுக்கீடுகளில் இருந்து விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்ள முடியவில்லை. | கோழி வளர்ப்புக்கான அங்கீகாரத்திற்காக chap செயற்திட்டத்திற்கு ரூபா 3,000,000 படி ரூபா 6,000,000 தொகை அனுப்பப்பட்டுள்ளது, எனவே அங்கீகாரம் கிடைத்தவுடன் செயற்திட்டத்தை உடனடியாக பூர்த்தி செய்ய முடியும். | உள்ளூராட்சி சபை மட்டத்தில் அமுல்ப்படுத்தப்பட க்கூடிய செயற்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 43 கடைகளின் உடன்படிக்கைகள் முறையானவையாக காணப்படாதமை அவதானிக்கப்பட்டதுடன் வலிதான உடன்படிக்கைகள் இன்றி கடைகளை வாடகைக்கு விடுவதில் கடைகளின் உரிமைத்துவத்தில் சிக்கல்கள், இடைக்கால குத்தகை பிரச்சனைகள் மற்றும் நிலுவைகளை அறவிடுவதில் சிக்கல்கள் என்பன ஏற்பட வாய்ப்புள்ளதால் உடன்படிக்கைகளை புதுப்பிப்பிப்பதற்கு அவசர கவனம் செலுத்தப்பட வேண்டும். | உடன்படிக்கைகளில் உள்ள குறைபாடுகள் விரைவில் சீர்செய்யப்பட்டு, எதிர்காலத்தில் பிரச்சனைகள் தீர்க்கப்படும். | உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹெலகம்புர திண்மக் கழிவு சேகரிப்பு நிலையத்தில் பிளாஸ்டிக் கழிவுகளை வெட்டுவதற்காக மாகாண விசேட அபிவிருத்தி மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 490,000 பெறுமதியான இயந்திரமொன்று 4 வருடங்களாக சபையின் அலுவலக களஞ்சிய அறையில் | மும்முனை மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும் ஹெலகம்புர வீதி வீடற்ற வீதியாக காணப்படுவதால் உர முற்றத்திற்கு மாத்திரம் | மின்சார இணைப்பை பெற்று, இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மும்முனை (three-phase) மின்சார இணைப்பு இன்றி விளைவற்றிருந்தது. | மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி சபைக்கு சொந்தமான கட்டிடங்கள் அமைந்துள்ள காணியின் பெறுமதி, 27 மயானங்கள் மற்றும் 10 விளையாட்டு மைதானங்களின் பெறுமதி என்பன இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எந்த மதிப்பீடும் செய்யப்படாததால் பெறுமதியை இனங்காண முடியவில்லை. | பெறுமதிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான பின்வரும் 05 கார்கள் மற்றும் வண்டிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபையிடம் பெறுமதி குறித்து எந்த பதிவேடும் காணப்படவில்லை. | பெறுமதிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபையின் வசம் உள்ள 10 பயன்படுத்த முடியாத வாகனங்கள் 04 முதல் 20 வருடங்களாக விளைவற்றிருந்தன. | இது தொடர்பான விடயங்கள் அவதானிக்கப்பட்டு பொருத்தமானவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பயன்படுத்த முடியாத வாகனங்களை ஏலமிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபை பயன்படுத்திய 09 வாகனங்களின் உரிமைத்துவத்தை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு சபை நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | மேற்படி- | வாகனத்தின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் சபையில் 16 வெற்றிடங்கள் காணப்பட்டமையும், அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாதமையால் அலுவலகத்தை நடாத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. | மாதாந்தம் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் மற்றும் புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு மூலம் சில வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |